## *20*

# மனப்பூர்வமான பாவத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்!

## (10:26-31)

*முன்னதாக எபிரெயர் 6:4-8ல் எழுத்தாளர், விசுவாச விலக்கம் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் பேசினார். இதை அவர் எபிரெயர் 10:26-31ல் மீண்டும் செய்தார். இருப்பினும் இந்த வேளையில் அவர், இப்பாடத்தின் கவனக்குவிப்பாக நான் பயன்படுத்த விரும்பும் சொற்றொடர் ஒன்றைப் பயன்படுத்தினார்: "... நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால்" (10:26அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "இந்தப் பாடத்திற்கு நான் மனப்பூர்வமான பாவத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்!" என்று தலைப்பிட்டுள்ளேன்.*

### "மனப்பூர்வமான பாவம்" என்பதன் விளக்கம்

கத்தோலிக்க சபை, பாவங்களை இரு வகைகளாக்கி வைத்துள்ளது: "சாவான" மற்றும் "அற்ப" பாவங்கள், இவ்விரு வகைகளில் சாவான பாவங்கள் என்பவை அதிகம் தீவிரமானவை என்றுள்ளன. நாம் பொதுவாக, பாவம் என்றால் பாவமே என்று வலியுறுத்துகிறோம் - அதாவது "பெரிய பாவங்கள்" அல்லது "சிறிய பாவங்கள்" என்று எதுவும் இல்லை - மற்றும் மனந்திரும்பியிராத *எந்தப்* பாவமும் நமது ஆத்துமாவிற்கு ஆக்கினைத் தீர்ப்பைக் கொண்டு வர முடியும். இருப்பினும் அதேவேளையில் நாம், *மனப்பூர்வமான* பாவத்திற்கும் *கவனக்குறைவான* பாவத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை உணர்ந்தறிதல் அவசியமாக உள்ளது.

"மனப்பூர்வமான பாவம்" என்றால் என்ன? முதலாவதும் முன்னதானதுமாக இது, *வேண்டும் என்றே செய்யப்பட்ட* பாவமாக உள்ளது. NIV வேதாகமத்தில் "நாம் வேண்டுமென்றே தொடர்ந்து பாவம் செய்துகொண்டிருந்தால்" என்றுள்ளது. "மனப்பூர்வமாக" என்று NASB வேதாகமத்திலும் "வேண்டுமென்றே" என்று NIV வேதாகமத்திலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ள வார்த்தை, கிரேக்க வாக்கியத்தில் முதலாவதாகக் காணப்படுகிறது - இது அவ்வார்த்தைக்கு விசேஷித்த வலியுறுத்தம் தருகிறது. நமது வசனப்பகுதியின்படி, மனப்பூர்வமான பாவம் என்பது "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு" செய்யப்படுகிற பாவமாக உள்ளது (வசனம் 26ஆ). பாவத்தைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் வேதாகமம் போதிப்பது என்ன என்பதை அறிந்துள்ள, ஆனால் அந்தப் போதனையைப் புறக்கணிக்கத் தேர்ந்துகொண்டு எப்படியாகிலும் பாவம்

செய்யத் தேர்ந்துகொள்ளும் யாரேனும் ஒருவரால் இது செய்யப்படுகிறது. இது தேவனுக்குக் கீழ்ப்படியக்கூடாது என்ற கருத்துக் கொண்டதாக உள்ளது, பாவத்தின் இந்த வகையானது பழைய ஏற்பாட்டில் "துணிகரமானது" என்று அழைக்கப்பட்டுள்ளது (காண்க சங்கீதம் 19:13).

"Willful" ("மனப்பூர்வமான") என்ற ஆங்கில வார்த்தை தொடக்கத்தில் "மனவிருப்பம் நிறைந்த" - அதாவது, ஒருவர் தமது சொந்த விருப்பத்தில் நிறைந்தவராக, ஒருவர் தமது சொந்த வழியைக் கொண்டிருக்க விருப்பம் உள்ளவராக இருத்தல் - என்று அர்த்தப்பட்டது. பாவத்தைப் பொறுத்த மட்டில், அது ஒருவர் தேவனுடைய சித்தத்திற்கு மாறாகத் தமது சொந்த விருப்பத்தினால் நிறைந்திருத்தல் என்று அர்த்தப்படுகிறது. மனப்பூர்வமாகப் பாவம் செய்கிறவர், "என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக்கா 22:42) என்று கூறுவதற்குப் பதிலாக, "உம்முடைய சித்தத்தின்படியல்ல, என்னுடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது!" என்று கூறுகிறார்.

தேவன் மக்களைச் சுயாதீனமான சித்தம் கொண்டவர்களாகப் படைக்கிறார் என்பதால், பெரும்பான்மையான பாவங்கள் "மனப்பூர்வமானவையாகவே" உள்ளன என்று விவாதிக்கப் படலாம். ஆகையால், இங்கு விவரிக்கப்பட்டுள்ளபடி, மனப்பூர்வமான பாவம் என்பது ஒருமுறை மாத்திரம் செய்யப்படுகிறது என்பதற்கு மாறாக, *விடாப்பிடியான* பாவமாக உள்ளது என்பது கூடுதலாகக் கூறப்பட வேண்டும். திறப்புச் சொற்றொடரில் கிரேக்க வினைச்சொல் நிகழ்கால வினையாக உள்ளது, இது *தொடர்ந்து நடைபெறும் செயல்* என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. NASB வேதாகமம் தனது மொழிபெயர்ப்பில், தொடர்ந்து நடைபெறும் செயலின் கருத்தைக் கொண்டுவருகிறது: "ஏனெனில் நாம் *மனப்பூர்வமாகப் பாவம் செய்வதைத் தொடர்ந்து செய்தால்*" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). NIV வேதாகமத்தில், "நாம் ... *பாவம் செய்துகொண்டே இருந்தால்*" என்றுள்ளது (என்னால் வலியுறுத்தப்படுகிறது). இங்கு ஒரு குறிப்பிட்ட பாவம் என்பதைக் காட்டிலும் அதிகமாக, தேவனுடைய சித்தத்திற்கு எதிராகக் கலகம் செய்யும் நிலை என்பதே கருத்தாக உள்ளது.

இதுவரையிலும் கூறப்பட்டவற்றில் இருந்து, கலாத்தியர் 5:19-21ல் உள்ளது போன்ற பாவங்களின் பட்டியல் ஒன்றை எடுத்துக்கொண்டு, அவற்றில் சிலவற்றை "மனப்பூர்வமானவை" என்றும் சிலவற்றை "கவனக்குறைவானவை" என்றும் வகைப்படுத்த முடியாது என்பது தெளிவாயிருக்க வேண்டும். *என்ன* செய்யப் பட்டது என்பது அல்ல, ஆனால் அது *ஏன்* செய்யப்பட்டது என்பதே ஒரு பாவத்தை "மனப்பூர்வமானது" என்று ஆக்குகிறது. மனப்பூர்வமான பாவம் என்பது கலகம் செய்யும் இருதயத்தின் பிரதிபலிப்பாக உள்ளது.

## மனப்பூர்வமான பாவத்தின் அபாயங்கள்

மனப்பூர்வமாகப் பாவம் செய்தல் குறித்து நாம் கவலைப்பட வேண்டியது ஏன்? 10ம் அதிகாரத்தின் முடிவுப்பகுதி, மனப்பூர்வமான பாவத்தின் பல அபாயங்களைப் பற்றிய கருத்துக்களைத் தருகிறது.

### 1. தேவன் நிந்திக்கப்படுகிறார்

நமது வசனப்பகுதியின் முடிவுக்கு அண்மையில் உள்ள வசனங்களைக் கண்ணோக்குங்கள். மனப்பூர்வமான பாவம் என்பது ஜீவனுள்ள தேவனுக்கு ஒரு

*நிந்தனையாக உள்ளது (வசனங்கள் 29, 31). பழைய ஏற்பாட்டில், "... எவனாவது துணிகரமாய் யாதொன்றைச் செய்தால், அவன் கர்த்தரை நிந்திக்கிறான்; அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டுபோகவேண்டும்" என்று எழுதப்பட்டுள்ளது (எண்ணாகமம் 15:30).*

***2. கிறிஸ்துவின் பலி புறக்கணிக்கப்படுகிறது***

*மீண்டுமாக, மனப்பூர்வமான பாவம் என்பது, இயேசுவின் பலியைப் புறக்கணித்தலாக உள்ளது (வசனங்கள் 26; மேலும் காண்க வசனம் 29). "அர்த்தம் நிறைந்த பலி ஒன்றே ஒன்றுதான் உள்ளது, அதை ஒருவர் மறுத்துச் செயல்படுகிறபோது, அவர் உதவிக்காகக் கண்ணோக்க வேறு எந்த பலியும் இருப்பதில்லை."[1]*

***3. இரட்சிப்பு பறிக்கப்படுகிறது***

*ஆகையால், மனப்பூர்வமான பாவம் என்பது ஆவிக்குரிய வகையில் சாவுக்கேதுவானதாக உள்ளது (வசனங்கள் 26-31). நமது வசனப்பகுதியில் உள்ள மேற்கோள்கள் உபாகமம் 32ம் அதிகாரத்தில் மோசேயின் பாடலில் இருந்து வருகின்றன. முதன்மையாக இதில் தேவனுடைய விரோதிகளைக் குறித்த குறிப்பு இருந்தது; ஆனால் தேவனுடைய மக்கள் அவரது நியாயத்தீர்ப்பிலிருந்து விலக்குப் பெறுவதில்லை என்று இவ்வசனப்பகுதி அறிவிக்கிறது. கிறிஸ்தவர்களும் அவ்வாறே விலக்குப் பெறுவது இல்லை.*

*யாரேனும் ஒருவர், "ஆனால் மனப்பூர்வமான பாவத்தில் இருந்து நான் மனந்திரும்பினால், நான் மன்னிக்கப்படுவதில்லையா?" என்று கேட்கலாம். மன்னிப்பிற்கான அவசியமானது, மனப்பூர்வமான பாவம் ஏன் இவ்வளவு அபாயகரமானதாக உள்ளது என்பதைத் துல்லியமாக்குகிறது. நான் கவனமின்றி பாவம் செய்கிறபோது, எனது மனச்சாட்சி என்னைக் குற்றப்படுத்துகிறது; பின்பு நான், "தேவனே, நான் வருத்தப்படுகிறேன்! நான் மனந்திரும்புகிறேன்! தயவு செய்து என்னை மன்னியும்!" என்று கதறுகிறேன். மனப்பூர்வமாகப் பாவம் செய்யும் ஒருவரிடத்தில், விசேஷமாக மனப்பூர்வமான பாவத்தில் விடாப்பிடியாக இருக்கும் ஒருவரிடத்தில், இவ்வாறு நடப்பது சாத்தியமில்லை. சர்வவல்லவரான தேவனுக்கு அடங்காமல் ஒருவர் துணிவாக இருக்கும்போது, அவர் இருதயம் உடைந்து போய் மனஸ்தாபப்பட்டு கர்த்தருக்கு முன்பாகத் தம்மைத் தாழ்த்தி மண்டியிடுதலை எங்கே கண்டறிய முடியும்?*

## *முடிவுரை*

*இந்தப் பாடத்தில் நான், கவனக்குறைவான பாவத்தை மனப்பூர்வமான பாவத்துடன் நேரெதிராக ஒப்பிட முயற்சி செய்துள்ளேன். இருப்பினும், எந்தப் பாவத்தையும் நான் அங்கீகரிப்பதாக நினைத்து விடாதீர்கள். மனப்பூர்வமாகப் பாவம் செய்யும் நிலையை ஒருவர் எவ்வாறு அடைகிறார்? பாவத்தை, எந்தப் பாவத்தையும், தீவிரமாகக் கருதாது இருப்பதினால்! நேர்மையாகக் கையாளப்படாத கவனக்குறைவான பாவம், மனப்பூர்வமான பாவத்தைச் செய்யும் வகையிலான இருதயத்தை உண்டாக்க முடியும் மற்றும் அவ்வாறே அது உண்டாக்குகிறது. ஒரு சில வசனங்களுக்குப்பின்பு, எழுத்தாளர் தமது வாசகர்களிடத்தில் தாம் கொண்டிருந்த தைரியமான நம்பிக்கையை*

*விளக்கப்படுத்தினார் (வசனம் 39); நமது வசனப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள பரிதாபமான நிலையை அவர்கள் இன்னும் அடைந்திருந்தது இல்லை. இருப்பினும், அவர்கள் சென்றுகொண்டிருந்த வழியில் தொடர்ந்து செல்வார்கள் என்றால், அவர்கள் அந்த நிலையில் இருப்பதைக் காணுவார்கள்! இது நமது சொந்த இருதயங்களை நாம் பரிசோதித்துப் பார்க்கச் செய்ய வேண்டும்: மனந்திரும்பத் தவறியுள்ள பாவம் ஏதேனும் நமது வாழ்வில் உள்ளதா? அவ்வாறு உள்ளது என்றால், இருதயத்தில் உணரப்பட்ட மனஸ்தாபத்துடன் இன்றே தேவனிடம் திரும்ப, அவர் நமக்கு உதவுவாராக!*

---

குறிப்பு

[1]J. D. Thomas, *Hebrews and James,* The Way of Truth: Message of the New Testament series (Abilene, Tex.: ACU Press, 1989), 50.